# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 05.10.2023**

**அசல் வழக்கு எண். 316/2011**

**பி.வா.சா.4 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

7ம் பிரதிவாதி சீனிவாசகம் எனது தந்தை என்றால் சரிதான். 8ம்பிரதிவாதி ஞானமுத்து எனது தாய்மாமா. வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது 7,8 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும், 7,8 பிரதிவாதிகள் தாங்களாகவே தங்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்ததன் பேரில் 7,8 பிரதிவாதிகள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். எனது தந்தை 7ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவருடைய வாரிசு என்ற முறையில் நான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். நான் எனக்கு மட்டும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது 9 முதல் 24 பிரதிவாதிகளுக்காக சாட்சியம் அளிக்கிறேனா என்றால் அனைவருக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

2. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 58 சென்ட் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்திற்கு வடபுறம் கோவில்பட்டி- ராஜபாளையம் செல்லும் பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அடுத்த மேல்புறம் தென்வடலாக பாதை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புறமும், கீழ்புறமும் 6ம் பிரதிவாதியின் தந்தையான சுப்பையாநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல. கீழ்புறம் பாதை உள்ளது. தெற்குபக்கம் எனது

கையிருப்பு இடங்கள் உள்ளது. தபசில் சொத்தின் மேல்கடைசி பகுதியில் 6ம்பிரதிவாதி காவலர் பயிற்சி பள்ளி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்சொன்ன காவலர்பயிற்சி பள்ளி எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் சுமார் 10 ஆண்டுகளாக உள்ளது. காவலர் பயிற்சி பள்ளி உள்ள இடத்தில் கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். காவலர் பயிற்சி பள்ளி அமைந்துள்ள இடம் மற்றும் கட்டிடங்கள் சேர்த்து மொத்தம் 38 சென்ட் இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 6ம் பிரதிவாதி காவலர் பயிற்சி பள்ளி நடத்திவரும் இடத்தில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது.

3. 6ம்பிரதிவாதி பயிற்சி பள்ளி நடத்திவரும் இடத்தை அவர் 1,2 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் நான் கேள்விப்பட்டேன். 6ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்தில் எனக்கு உரிமை உள்ளதாக நான் எந்த சட்ட நடவடிக்கையாவது எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன். காவல் நிலையத்திலும் வட்டாட்சியர் அலுவலகத்திலும் புகார் கொடுத்தேன். அந்த சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்ததாக சொல்லும் வழக்கின் எண் மற்றும் நீதிமன்றம் பெயர் தெரியுமா என்றால் இந்த நீதிமன்றத்தில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மேற்சொன்ன வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6ம் பிரதிவாதி கனகராஜ் மற்றும் அவருடைய சகோதரர் நாராயணசாமி ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் தற்போது சொல்லும் வழக்கு பற்றி எனது தந்தை தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலோ அல்லது நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய முதன்மை உறுதிக்கூற்றிலோ எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் சொல்லும் வழக்கின் பிராதோ அல்லது எதிர்வழக்குரையோ இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதைபோல் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக தற்போது பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 6ம் பிரதிவாதி நடத்திவரும் காவலர் பயிற்சி பள்ளிக்கு கீழ்புறம் காலி மனை உள்ளது என்றால் சரியல்ல பாதை உள்ளது. நான் சொல்லும்பாதை எத்தனை அடி உள்ளது என்றால் அடி கணக்கு எனக்கு ஞாபகம் இல்லை. 13 சென்டில் பாதை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை உறுதிக்கூற்றிலோ எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ மேற்சொன்ன 13 சென்டின் பாதை உள்ளதாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 6ம் பிரதிவாதி நடத்திவரும் காவலர் பயிற்சி பள்ளிக்கு கீழ்புறம் நான் சொல்வதைப்போல் எந்த பாதையும் இல்லை என்றாலும், அங்கு 5ம் பிரதிவாதி கணேசமுருகனுக்கு பாத்தியப்பட்ட காலிமனை மட்டுமே உள்ளது என்றாலும் சரியல்ல.

5. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் காவலர் பயிற்சி பள்ளிக்கு கீழ்புறம் உள்ள காலிமனையை தான் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லும் பாதைக்கு கீழ்புறம் 6ம் பிரதிவாதியின் சகோதரர் நாராயணசாமியின் வீடு உள்ளது. மேற்சொன்ன காவலர்

பயிற்சி பள்ளி, பாதை மற்றும் நாராயணசாமியின் வீட்டுக்கு தென்புறம் என்னுடைய கையிருப்பு இடம் உள்ளது. வாதி வழக்கு தாக்க்ல் செய்துள்ள 46 சென்டில் எவ்வளவு இடத்திற்கு நான் உரிமை கோருகிறேன் என்றால் அதில் 13 சென்ட் எனக்கு பாத்தியமாகும். எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் 13 சென்ட்எந்த பகுதியில் உள்ளது என்றால் காவலர் பயிற்சி பள்ளிக்கு கீழ்புறம் 13 சென்டில் உள்ள பாதைதான் எனக்கு பாத்தியப்பட்ட 13 சென்ட் இடம்.

6. எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் காவலர் பயிற்சி பள்ளிக்கு கீழ்புறம் உள்ள 13 சென்டில் பாதை உள்ளதாகவும், அந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான்தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.16 முதல் 19 வரையிலான ஆவணங்கள் என்ன ஆவணங்கள் என்ற விபரம் தெரிந்துதான் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.426/பி5 ல் 1 ஏக்கர் 19 சென்ட் எங்களுக்கு பாத்தியப்பட்டது. அதில் 63 சென்டை எனது தாத்தா டேனியல் வாத்தியார் நான்கு நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டார். எனது தாத்தா விற்றது போக 56 சென்ட் எங்கள் கையிருப்பில் இருந்து வருகிறது. மேற்சொன்ன 1 ஏக்கர் 19 சென்டில் இருக்கும் கிணற்றில் எங்களுக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் பாதி பாத்தியம் உள்ளது. மேற்சொன்ன கிணற்று பாத்தியத்தை கிரையம் பெற்ற ஆவணம்தான் பி.வா.சா.ஆ.16 மற்றும் 19 என்றால்ச ரிதான். மேற்சொன்ன ஆவணத்தில் யார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனது பூட்டனார் சாமுவேல்வாத்தியார் ஈசாக் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார்.

7. பி.வாசா.ஆ.16 மற்றும்1 9 ஆவணத்தை பற்றி எங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லைஎ ன்றால் சொல்லியுள்ளேன். எங்களுடைய எதிர்வழக்குரையில் மேற்படி ஆவணங்கள் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றாலும், தற்போது பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சாமுவேல் உபாத்தியா குமாரர் டேனியல்வாத்தியார் என்பவர் எனது தாத்தா என்றால் சரிதான். எனது தாத்தா டேனியல் வாத்தியாருக்கு எனது தந்தை சீனிவாசகம் மற்றும் பொன்னையா ஆகியோர் இரண்டு மகன்கள் என்றால் சரிதான். பி.வாசா.ஆ.17 கிரைய ஆவணத்தை எனது தாத்தா டேனியல் வாத்தியார் த னக்காகவும், தன்னுடைய மைனர் மகனான எனது தந்தை சீனிவாசனுக்கு கார்டியனயாக இருந்து மேற்சொன்ன பொன்னையாவோடு சேர்த்து டேவிட், சர்குணம், ரத்தினசாமி, டேனியல் குமாரர் தன்ராஜ் ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வாசா.ஆ.17 ஆவணத்தில் கிரையம் பெற்ற தன்ராஜ்தான் 1ம்பிரதிவாதியின் கணவர் மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான். பி.வாசா.ஆ.17 பத்திரத்தில் சர்வே எண்.426/பி6 ல் 1.16 ஏக்கரும், 426/பி/5 பில் 63 சென்டும், 426/பி2 பி ல் 15 சென்டும் ஆக மொத்தம் 1 ஏக்கர் 94 சென்டை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வாசா.ஆ.17 பத்திரத்தில் சொத்துக்களை கிரையம் கொடுக்கும் போது எனது தாத்தா கையிருப்பு இடம் உள்ளதாக மாலில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் அந்த பத்திரத்தில் சர்வே எண்.426/பி7 ல் உள்ள கிணற்றில் பாதி பங்கை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. பி.வாசா.ஆ.17 ல் கிரையம் கொடுக்கப்பட்டுள்ள சர்வே எண்.426/பி6, 2 பி மற்றும் 5 பி ஆகிய சொத்துக்கள்தான் தற்போது வழக்கு சொத்து என்றால் சரிதான். பி.வா.சாஆ.18 ஆவணம் 2ம்பிரதிவாதியின் தந்தை தன்ராஜ் , அவருடைய சகோதரர்களும் மற்றும் பங்காளிகள் பாகம் பிரித்துக்கொண்ட ஆவணம் என்றால்ச்ரிதான். பி.வாசா.ஆ.18 ஆவணத்தில் சர்வே எண்.426/பி6, 2 பி, 5 பி ஆகியவைகளில் மொத்தம் 62 சென்ட் 2ம்பிரதிவாதியின் தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்த 62 சென்ட் தான் தற்போது பிரச்சனைக்குரிய சொத்து என்றால் சரிதான். அந்த 62 சென்டைதான் தன்ராஜ் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை 1 2, பிரதிவாதிகள் மற்றும் தன்ராஜ்டமிருந்து கிரையம் பெற்றதாக வழக்காடி வருகிறார்கள் என்றால் அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள் ஆனால் அது சரியல்ல. எனது தாத்தாவும், அவருடைய பிள்ளைகளும் கிரையம் கொடுத்த பி.வா.சா-ஆ.17 ஆவணத்தில் நான் சொல்வதைப்போல் 13 சென்ட் பாதை உள்ளதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்தில் 13 சென்டில் பாதை உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1972 ம் ஆண்டு பத்திரம் தாக்கல் செய்துள்ளேன்.

9. நான் சொல்லும் 1972 ம்ஆண்டு பத்திரம்தான் பி.வாசா.ஆ.16 ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 13 சென்ட் பாதை என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் 9 முதல் 24 பிரதிவாதிகளுக்கும் மற்றும்

என் தந்தைக்கும் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன 8ம் பிரதிவாதி ஞானமுத்துக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளதா என்றால் அவருக்கு நடைபாதையில் உரிமை உள்ளது. 8ம் பிரதிவாதிக்கு நடைபாதையில் உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவும், எ னது தந்தை மற்றும் அவருடைய சகோதரர் ஆகியோர் ஏற்கனவே வழக்கு சொத்தில் தங்களுடைய உரிமையை 2ம் பிரதிவாதியின் தந்தைக்கும் விற்பனை செய்துவிட்டதால் எங்களுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வாசா.ஆ.17 ஆவணம் மூலம் எனது தாத்தா வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதியின் தந்தைக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 63 சென்ட் மட்டும் விற்பனை செய்துள்ளார். வழக்கு சொத்திற்கும், எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎ ன்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல் நாங்கள் பொய்யான உரிமை கோரி இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்ந்துள்ளோம் என்றால்சரியல்ல. எங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகளை பொறுத்து என்னடைய நிருபண உறுதிக்கூற்றில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் நாங்கள் பொய்யாக வழக்காடிவருகிறோம் என்றால் சரியல்ல. வாதியின்

தூண்டுதலின்பேரில் நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்ந்து பொய்வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல.

**3 முதல் 8 பிரதிவாதிகள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**